**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர், தேதி: 18.05.2026
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

## இளம் ஆராய்ச்சியாளர்களின் திறன்களை மேம்படுத்த நவீன மெட்டபாலோமிக்ஸ்–புரோட்டியோமிக்ஸ் குறித்த செய்முறை பயிற்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் உயிரித்தொழில்நுட்ப மகத்துவ மையம் (COXBIT) சார்பில் "மேம்பட்ட பகுப்பாய்வு தளங்களை பயன்படுத்திய மெட்டபாலோமிக்ஸ் மற்றும் புரோட்டியோமிக்ஸ்" குறித்த ஐந்து நாள் செய்முறை பயிற்சி முகாம் 18 முதல் 22 மே 2026 வரை நடைபெறும். இதன் துவக்க நிகழ்ச்சி CPMB&B கருத்தரங்க அரங்கில் நடைபெற்றது. இப்பயிற்சியில் இளநிலை மற்றும் முதுநிலை மாணவர்கள், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக விஞ்ஞானிகள், இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழக ஆராய்ச்சியாளர்கள் மற்றும் இந்தியாவின் பல்வேறு கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களைச் சேர்ந்த பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர்.

முனைவர். ஈ. கோகிலாதேவி, பேராசிரியர் மற்றும் தலைவர் தாவர உயிரித்தொழில்நுட்பத்துறை அவர்களின் வரவேற்புரையைத் தொடர்ந்து, உயிரித் தொழில்நுட்ப மகத்துவ மையம் மற்றும் தாவர மூலக்கூறு மற்றும் உயிரி தொழில்நுட்ப மையத்தின் இயக்குநரான முனைவர். ந. செந்தில் அவர்கள் நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்து உரையாற்றினார். அவர், நவீன உயிரியல் ஆராய்ச்சியில் மெட்டபாலோமிக்ஸ் மற்றும் புரோட்டியோமிக்ஸ் தொழில்நுட்பங்களின் வளர்ந்து வரும் முக்கியத்துவத்தையும், அவற்றின் வேளாண்மை, சுகாதாரம், சுற்றுச்சூழல் ஆய்வுகள், மருந்து கண்டுபிடிப்பு, சிஸ்டம்ஸ் பயாலஜி மற்றும் உயிரியல் குறியீடு (Biomarker) கண்டறிதல் போன்ற துறைகளில் உள்ள பயன்பாடுகளையும் விளக்கினார். மேலும், உருவெடுத்து வரும் அறிவியல் மற்றும் சமூக சவால்களை தீர்க்க மேம்பட்ட ஓமிக்ஸ் தொழில்நுட்பங்களின் பங்கு மிகவும் அவசியமானது என வலியுறுத்தினார்.

தலைமை உரையில், மாணவர் நல மையத்தின் முதன்மையர் முனைவர்.ஜி.பாலசுப்பிரமணியன் அவர்கள் உயிரித் தொழில்நுட்பத்தில் மேம்பட்ட பகுப்பாய்வு தளங்கள் மற்றும் பல்துறை ஆராய்ச்சிகளின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். உயிரினங்களின் பல்வேறு உயிரியல் செயல்முறைகளில் மெட்டபாலைட்டுகளின் (Metabolites) முக்கிய பங்கை விளக்கி, மெட்டபாலோமிக்ஸ் மற்றும் புரோட்டியோமிக்ஸ் தொழில்நுட்பங்கள் உயிரியல் குறியீடு கண்டறிதல் (Biomarker Identification), மெட்டபாலிக் ஃபிங்கர்பிரிண்டிங் மற்றும் மருந்து–மெட்டபாலைட் தொடர்பியல் ஆய்வுகளில் வழங்கும் பயன்பாடுகளை எடுத்துரைத்தார். நன்றியுரையை முனைவர். சு. வெள்ளைக்குமார், இணைப் பேராசிரியர், உயிரித்தொழில்நுட்பத்துறை அவர்கள் வழங்கினார்.

இப்பயிற்சி முகாமில் மெட்டபாலோமிக்ஸ் மற்றும் புரோட்டியோமிக்ஸ் ஆய்வுகளில் பயன்படுத்தப்படும் பல்வேறு பகுப்பாய்வு மற்றும் கணினி தளங்கள் குறித்து விரிவான கோட்பாட்டு மற்றும் செய்முறை பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதில் மாதிரி தயாரிப்பு முறைகள், தாவர மெட்டபாலைட் பகுப்பாய்வு, குரோமட்டோகிராபி பிரிப்பு தொழில்நுட்பங்கள், கலிப்ரேஷன் நடைமுறைகள், நேர்கோட்டுத்தன்மை, கண்டறிதல் வரம்பு (LOD), அளவீட்டு வரம்பு (LOQ) மற்றும் துல்லிய பகுப்பாய்வு ஆகியவை குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது.

மேலும், மேம்பட்ட பகுப்பாய்வு கருவிகளின் செயல்முறை பயன்பாடு மற்றும் தரவு சேகரிப்பு நடைமுறைகள் குறித்து பங்கேற்பாளர்களுக்கு நேரடி அனுபவம் வழங்கப்படுகிறது. உயிரியல் தகவலியல் கருவிகள் மூலம் மெட்டபாலோமிக் தரவு பகுப்பாய்வு, மெட்டபாலிக் புரோஃபைலிங், மூலக்கூறு மாதிரிவடிவமைப்பு மற்றும் மூலக்கூறு டாக்கிங், புரோட்டியோமிக் தரவு விளக்கம், மேல்–கீழ் மற்றும் கீழ்–மேல் புரோட்டியோமிக்ஸ் அணுகுமுறைகள் போன்ற மேம்பட்ட கணினி உயிரியல் கூறுகளும் பயிற்சியில் இடம்பெற்றுள்ளன. ஓமிக்ஸ் அடிப்படையிலான ஆராய்ச்சி மற்றும் பயன்பாட்டு உயிரித் தொழில்நுட்ப துறைகளுக்கான தரவு செயலாக்கம் மற்றும் பகுப்பாய்வு விளக்க முறைகளிலும் பங்கேற்பாளர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

***மக்கள் தொடர்பு அலுவலர்***